## சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகம் - 2015

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடடுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரட்டிய பெறுமானத்தேய்வு ரூபா 854,167 வரை பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 1,250,000 கிரயமான மோட்டார் வண்டி கைதவிர்ப்புச் செய்யப்படாமல் முன்னைய ஆண்டின் போது கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு வரை இச்சொத்து நிறுவகத்திடம் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டினுள் கைதவிர்க்கப்பட்ட 50 சொத்து உருப்படிகள் தொடர்பாக கைதவிர்ப்பிலான நிதி விளைவுகள் இனங்காணும் போது அச்சொத்துக்களுக்குரிய கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பவற்றிற்காக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் கிரயம் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் கிரயத்திற்கிடையே ஒப்பிடும் போது ரூபா 16,643,901 ஆன வேறுபாடு காணப்பட்ட போதிலும் அதனை இனங்கண்டு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதி அனுசரணையின் கீழ் பட்டப்பின் படிப்பு பயிற்சியொன்றுக்காக வெளிநாடு சென்ற விரிவுரையாளர் ஒருவரின் விமான டிக்கட் கட்டணமாக ரூபா 79,000 நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014, 2015 ஆம் ஆண்டுகளுக்காக பரீட்சை நடவடிக்கைகளுக்காக கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு செலுத்தப்படாத ரூபா 151,465 பரீட்சைக் கட்டணத்தை தீர்வு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 507(1) மற்றும் 756 | அரசின் சகல சொத்துக்களும் மெய்மையாய்வுச் சபை மூலம் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 25,865,542 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மற்றும் ராஜகிரிய ஆண்கள் விடுதியின் 503 பொருட் பதிவேட்டுப் பொருள் அலகுகள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 757(2) (அ) மற்றும் (ஆ) | பொருள் மெய்மையாய்வு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட வேறுபாடுகள், அதற்கான காரணங்கள் மற்றும் பரிந்துரைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் தீர்மானம் ஏ 66 மாதிரியில் பதிவுசெய்யப்பட்டு அம்மாதிரியின் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 81 பொருள் பற்றாக்குறை மற்றும் 116 பொருள் மிகைகள் தொடர்பான அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 4.2.2 | நிறுவகத்தினால் கூட்டிணைந்த திட்டம், பாதீடு மற்றும் செயலாற்றல் என்பவற்றை காலத்திற்கு காலம் புலனாய்வு செய்து உள்ளவாறான செயலாற்றலை உறுதிப்படுத்துவதினூடாக உரிய திட்டம் மற்றும் பாதீடு என்பவற்றின் திருத்தத்திற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் மாதாந்த செயலாற்றல் அறிக்கை பதவிநிலை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 21,218,671 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 9,425,582 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 11,793,089 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு காலக்கழிவு கணக்கீடு செய்யும் கொள்கை வேறுபட்டமை பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது தொடர்ச்சியான நிதிப்பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரிக்காக சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் பற்றாக்குறை சாதகமான நிலைமையொன்றாக காண்பித்ததுடன், அதில் தொடர்ச்சியான அதிகரிப்பொன்று தென்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் பங்களிப்பு ரூபா 71,366,732 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

ஆயுர்வேத யூனானி மற்றும் இலங்கையின் பாரம்பரிய வைத்திய முறைமைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு உரித்தாக அறிவினை விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றிற்காக போதனைகள் மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக 1980 ஆம் ஆண்டின் போது சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. செயலாற்றல் நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 திசெம்பர் 21 ஆந் திகதிய 07 ஆம் இலக்க சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவக வழிகாட்டியில் நிறுவகத்தில் பட்டப்பின் பாடநெறிகளை நடாத்துவதற்குரிய அதிகாரங்கள் வழங்கப்படாதிருந்த போதிலும், சட்ட ரீதியான திருத்தமொன்றில்லாமல் நிறுவகத்தினால் வருடக் கணக்காக பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) பட்டப்பின் படிப்பு கல்விப் பிரிவின் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஆயுர்வேத பட்டத்திற்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மாணவர் பதிவு 36 மாணவர்களிலிருந்து 16 மாணவர்கள் வரை ஆண்டுதோறும் படிப்படியாக குறைவடைந்திருந்ததுடன், பதிவுசெய்யப்பட்ட மாணவர்களில் பாடநெறிகளை பூர்த்தி செய்யாத மாணவர்களின் எண்ணிக்கை 8 சதவீதத்திலிருந்து 42 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(இ) சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் ஆயுர்வேத மருத்துவ பாடநெறிக்காக சமூகமளித்திருந்த மாணவர்களில் பரீட்சை சித்தியின்மை சதவீதத்தின் சராசரி 37 சதவீதம் மாத்திரமென அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஐந்து ஆண்டுகளின் பட்டப் படிப்பில் சித்தியடைந்த மாணவர்களின் தரவுகளைப் பரீட்சித்த போது பட்டப்படிப்பில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் ஆயுர்வேத பட்டப்பப்டிபில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் போது 61 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டில் ஆயுர்வேத விடயத்துறைக்காக 2004/2005 கல்வியாண்டிலிருந்து 2012/2013 கல்வியாண்டிற்காக மேலதிகமாக 10 முறை மேலதிக பரீட்சைகள்

நடாத்தப்பட்டிருந்ததுடன், மேலதிக பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்கள் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆயுர்வேத பரீட்சைக்காக தோற்றிய முழு மாணவர்களின் எண்ணிக்கையில் 27 சதவீதமாக இருந்தது. மேலதிக பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்கள் எண்ணிக்கையில் 22 சதவீதம் மீண்டும் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை.

(ஊ) 2015 ஆம் ஆண்டில் யூனானி விடயத்துறைக்காக 2006/2007 கல்வியாண்டிலிருந்து 2012/2013 கல்வியாண்டிற்காக மேலதிகமாக 7 பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், மேலதிக பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட யூனானி பரீட்சைக்காக தோற்றிய முழு மாணவர்களின் எண்ணிக்கையின் 14 சதவீதமாக இருந்தது.

(எ) 7 பிரதான செயற்பாடுகளின் கீழ் 56 உப செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 20 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 24 செயற்பாடுகளை 2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நிறுவகம் தவறியிருந்தது. நிறைவேற்றப்படாத செயற்பாடுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 27 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ மாணவர்களின் செய்முறை செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்களை வைத்திருப்பதற்கு பொருத்தமான இடவசதிகள் வழங்கப்படாத காரணத்தினால் தகவல் தொழில்நுட்ப பிரிவு வளவில் உரிய உபகரணங்கள் தற்காலிகமாக வைக்கப்பட்டு செய்முறை பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதியாளரினால் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீதி அசாதாரணமாக இருத்தல், காசேட்டில் பதிவுசெய்யும் போதும் வங்கிக் கணக்கக் கூற்று தயாரிக்கும் போதும் இடம்பெற்ற தவறுகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. போதியளவு கவனமில்லாமல் செயற்படல் நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் ஏற்படுவது தொடர்பில் தாக்கமளிக்கக்கூடுமென தென்படுவதுடன் இது தொடர்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 4.3 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாணவர் கல்வி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக மருந்துகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நோக்கில் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,280,000 கிரயமொன்றினை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரம் 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் குறித்த செய்றபாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) யூனானி மருத்துவ கல்வி நவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 376,700 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து இயந்திரங்களை செயற்படுத்துவதற்கு தேவையான ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாமையால் 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

சுதேச மருத்துவ நிறுவகம் ஆயுர்வேத மற்றும் யூனானி என இரண்டு துறைகளாக இருந்ததுடன், ஒவ்வொரு துறையும் வெவ்வேறாக 8 கல்விப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அந்தந்த கல்வித்துறை மற்றும் கல்விப் பிரிவுகளின் இலக்கை நோக்ககாக கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கல்வித்துறைகள் ஊடாக நிறுவகத்தினுள் இடம்பெறும் செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்படாமையால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் - அலுவலக உபகரணங்கள் - ஏனைய மற்றும் கணனி உபகரணங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டை மிகைத்து ரூபா 7,531,603 ஆன கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 2014 கொள்வனவுத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 9,812.460 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிஏற்பாட்டு மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2015 இன் கொள்வனவு திட்டத்திற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மொரகஸ்மொல்ல மாணவர் விடுதி (மகளிர்) செயற்திட்டத்திற்காக ரூபா 2,128,536 பெறுமதியான 80 கட்டில்கள் மற்றும் தேவையான பொருட்கள் தொடர்பாக விதந்துரைப்புக்கள் தயாரித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் இரண்டாவது சர்வதேச செயலமர்விற்காக ரூபா 2,021,600 பெறுமதியான கருத்தரங்கு உபகரணங்கள் செயல்நடவடிக்கை திட்டத்திற்கோ அல்லது கொள்வனவு திட்டத்திற்கோ உள்ளடக்கப்படாமல் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 5.3 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படு:கின்றன.

(அ) பொறியியல் மதிப்பீட்டை சரியாக தயாரிக்காமையால் ''காற்றுச்சீராக்கி முறைமைக்காக மின்சாரம் வழங்கும் செயற்திட்டம்'' இற்காக நிறுவகத்தின் மதிப்பீடு ரூபா 126,182 ஆக இருந்த போதிலும், ரூபா 135,720 ஆன குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதும் அவரால் அது நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் 4 நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக மேலதிக வேலைகளுக்காக 10 சதவீதத்தை மிகைத்து ரூபா 342,480 அங்கீகாரமில்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 4,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த விளையாட்டரங்கை புனரமைப்பதற்கான செயற்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு மேலாக 59 சதவீதத்தை மிகைத்து ரூபா 6,365,796 இற்கு தேசிய போட்டி விலைகோரலின் கீழ் 2016 ஆம் ஆண்டின் போது தேசிய போட்டி விலை கோரப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டு செயற்படுத்தப்படாத ரூபா 200,000 மதிப்பீட்டுப் பெறுமதியான கால்நடை தடுப்பகம் 2016 பெப்ரவரி 17 ஆந் திகதி வரை பூர்த்தி செய்ப்பபடாதிருந்த துடன், 2015

நவெம்பர் 26 ஆந் திகதி ரூபா 1,161,700 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்படாமல் இரண்டு செயற்திட்டங்கள் அவசர தேவைப்பாடாக கருதி பெறுமதிசேர் வரியில்லாத விலையான ரூபா 734,080 இற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரமொன்றில்லாமல் வழங்கி செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) கொள்வவு நடவடிக்கை கட்டுப்பாடு | (i) | கொள்வனவு செய்யப்படும் அளவு மற்றும் எண்ணிக்கை, கொள்வனவுக் காலம், ஸ்தாபிப்பதற்கு தேவையான இடவசதிகள் என்பவற்றைத் தீர்மானிக்கும் போது முகாமைத்துவம் மற்றும் பிரிவுகளுக்கிடையே கூட்டிணைப்பொன்று இடம்பெறக்கூடிய வகையில் முறைமை திட்டமிடப்படாதிருந்தமை |
| | (ii) | கொள்வனவுத் திட்டத்தை நாளதுவரையாக பேணாமை மற்றும் கேள்வி திறக்கும் போதும் அறிக்கையிடும் போதும் உரிய மாதிரியொன்றில் அறிக்கையிடாமை. |
| (ஆ) ஒப்பந்த நிர்வாகம் | | உரிய விதந்துரைப்புகளை இனங்காணாமை, கால நிர்ணயம் முறையாக இடம்பெறாமை, கேள்வி வழங்கலின் போது கேள்விதாரரிடம் இயலுமைகளை இணங்காணாமை, வேலை மேற்பார்வை முறையாக மேற்கொள்ளாமை, ஒப்பந்த முரண்கள் அடிக்கடி ஏற்பட்டமை தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தாமை. |
| (இ) சொத்துக்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு | | சொத்துக்கள் மற்றும் பொருட் பதிவேட்டு பொருட்கள் முழுமையாக பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை, மெய்மையாய்வுச் சபை செயற்பாடுகள் திட்டவட்டமாக கையளிக்கப்படாமை, தேவையான அறிவுறுத்தல்கள் போதியளவில் வழங்கப்படாமை, மாதிரிப் படிவங்கள் முறையாக பூர்த்தி செய்யப்படாமை. |
| (ஈ) கணக்கீடு | | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக வகைப்படுத்தப்படாமை மற்றும் நிதிக்கூற்றுக்களில் தரவுகள் அதற்குரிய பட்டோலைகளுடன் இணங்காமை. |

| | | |
|---|---|---|
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை, தேவையான பதிவேடுகள் பேணப்படாமை மற்றும் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஊ) | தொழிற்பாட்டுக் கட்டுப்பாடு | மாணவர் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு முடியுமான வகையில் நிறுவகத்தினால் மாணவர் தரவுகள் பராமரிக்கப்படாமை |